# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.505/C/2024

திரு R. அருள் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலர்,
சென்னை வனக்கோட்டம் 7-வது தளம்,
பனகல் மாளிகை சைதாப்பேட்டை,
சென்னை - 600 015. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 10.10.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 28.11.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 11.01.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு R. அருள் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு M. விஜயகுமார், உதவியாளர், மாவட்ட வன அலுவலகம், பனகல் மாளிகை சைதாப்பேட்டை, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை மாவட்ட வன அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சென்னை எழும்பூர் இரயில் நிலைய விரிவாக்கத்திற்கான முறையே 182 மரங்களை வெட்டுவதற்கும், 103 மரங்களை வேறு இடத்தில் நடுவதற்கும் கடந்த 10.05.2023 அன்று District Green Committee அனுமதி அளித்த ஆணையின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரங்களை மொத்தம் 8 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.2943/2024/O நாள் 30.03.2026 மற்றும் ந.க.எண்.2934/2024/கு நாள் 07.04.2026 ஆகிய தேதிகளிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக ஏற்கெனவே மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், அத்தகவல்கள் மனுதாரருக்கு போதுமானவை எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA.505/C/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:-**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலர்,
சென்னை வனக்கோட்டம் 7-வது தளம்,
பனகல் மாளிகை சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

**வழக்கு எண்.SA.505/C/2024**
**மனுதாரர்**
திரு R. அருள்,
S1A Silver Castle, எண்.3, வெங்கடேஸ்வரா தெரு,
தனலட்சுமி காலனி, வடபழனி,
சென்னை - 600 026.

Copy to: File
SNPS / 15.04.2026